தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 ஜூலை 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. கே. எஸ். லட்சுமிபதி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. கே. எஸ். லட்சுமிபதி அவர்கள் 4—7—1971-ஆம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாயவரத்திலுள்ள ஏ. வி. சி. கல்லூரிக்கு மானியம் வழங்கல்

*146 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் ஏ. வி. சி. கல்லூரிக்கு 1970–71-ஆம் கல்வி ஆண்டில் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-ஆம் ஆண்டு மாயூரம் ஏ. வி. சி. கல்லூரிக்கு கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்பட்டன.—

ஆசிரியர்களுக்கான மானியம்—

(1) முன்பணமாக—ஆசிரியர் மானியம் ரூ. 37,300.

(2) முன்பணமாக—கட்டண ஈட்டுத்தொகை ரூ. 1,24,200.

(3) இறுதியான—ஆசிரியர் மானியம் ரூ. 38,401.

கட்டட மானியம்—இல்லை.

தளவாட மானியம்—ரூ. 4,755.

கட்டடம் கட்டுவதற்காக எந்தவித மானியமும் வழங்கப்படவில்லை.